# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்:0365/2016/நகராட்சி

ஆணை எண்: 137/2016

நாள்: 11/08/2016

திரு. ரெ. அழகர்சாமி,
போடிநாயக்கனூர். மனுதாரர்

நகராட்சி ஆணையர்
போடிநாயக்கனூர் நகராட்சி. எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரரது 02.04.2016 மற்றும் 02.05.2016 நாளிட்ட மனுக்களில் தான் போடிநாயக்கனூர் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் தனக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெறவில்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது. இது நிர்வாக ரீதியிலான பொருள் கொண்டதாக இருப்பினும் 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 7–ல் குறிப்பிட்டுள்ள குறைபாடுடைய செயல்பாடுகள் இடம் பெற்றுள்ளனவா என்பதை பரிசீலிக்கும் பொருட்டு இம்முறை மன்ற நடுவம் வழக்காக பதிவு செய்து அறிக்கைகள் பெறப்பட்டன. வரப்பெற்றுள்ள அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. போடி நாயக்கனூர் நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.7115/14/சி1 நாள்: 23.02.2016–ன் படி (நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முகவரியிட்டது) 18.06.2015–ல் மனுதாரரது கோரிக்கை குறித்த முன்மொழிவு

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரரும் தனது 06.04.2016 நாளிட்ட மனுவினை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பியுள்ளார்.

போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரது செயல்முறைகள் ந.க.எண்.6815/2006/சி1 நாள்.19.03.2014–ன்படி, மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு தீர்ப்பு மற்றும் மேல்முறையீடு தீர்ப்பின் (WA(MD)எண்.612/13 நாள்.09.07.2013) அடிப்படையில் 28.02.2006–ல் ஓய்வு பெற்ற மனுதாரருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் 27.10.2000 முதல் பணிவரன் முறை செய்தும் பணப்பயன்கள் வழங்கியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரது ஓய்வூதிய கோரிக்கை குறித்த நிலை தொடர்பான அறிக்கை அனுப்பி வைத்திடுமாறு போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர் ஆகியோர் இம் முறைமன்ற நடுவத்தின் 20.05.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உதவி இயக்குநரது கடிதம் மூ.மு.15591/MPV(2)/2016 நாள்.08.06.2016–ல் மனுதாரர் போடிநாயக்கனூர் நகராட்சியில் இளநிலை உதவியாளர் ஆக பணியாற்றி 28.02.2006–ல் ஓய்வு பெற்றுள்ளாரெனவும் இவர் அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.27.05.1999–ன் படி 27.10.2000 அன்று பணியமர்த்தப்பட்டுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு ஆணை எண்.166 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.31.12.2014–ன் படி அவர்து பணி 23.02.2006 முதல் வரன்முறைபடுத்தப்பட வேண்டுமென்பதால் அவர் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வருவார் எனவும், ஓய்வூதியம் பெற தகுதியில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை குறித்த விவரங்களடங்கிய அறிக்கை போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரிடமிருந்தும் ந.க.எண்.7115/2016/சி1 நாள்.13.06.2016–ல் வரப்பெற்றது. மேலும், நகராட்சி தரப்பில் மனுதாரருக்கு ஓய்வூதிய கருத்துருக்குள் அனுப்புவதில் காலதாமதம் ஏதுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை நீதிமன்ற ஆணைகளின்படி மனுதாரருக்கு 27.10.2000 முதல் இளநிலை உதவியாளர் நிலையில் ஊதிய நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணைகளைக் கருத்தில் கொண்டு சிறப்பினமாகக் கருதி மேற்படி அரசாணையிலிருந்து விலக்கு பெற்றிட உரிய முன்மொழிவினை துறைத்தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்புதல் குறித்து பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவத்தால் நகராட்சி ஆணையருக்கு 22.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் ஆணையிடப்பட்டது. அதன்படி மனுதாரரது கோரிக்கை குறித்து உரிய கருத்துரு நகராட்சி ஆணையரால் அரசுக்கு (துறைத் தலைவர் மூலமாக) தற்போது (ந.க.எண்.7115/14/சி1 , நாள்.15.07.2016) அனுப்பப்பட்டு இம் முறைமன்ற நடுவத்திற்கு நகல் வரப்பெற்றுள்ளது. மேலும் மனுதாரருக்கும் நகலிடப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரது முறையீடு குறித்து உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்ட நிலையில் இம்முறை மன்ற நடுவத்தில் நடவடிக்கை கைவிடப்பட்டு முற்றாக்கலாமென கருதப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11–ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/
// உண்மை நகல் //

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு.ரெ.அழகர்சாமி,
94/3/வா. 7வது தெரு, டி.வி.கே.கே.நகர்,
போடி நாயக்கனூர், தேனி மாவட்டம்.

2.நகராட்சி ஆணையர்,
போடி நாயக்கனூர் நகராட்சி,
தேனி மாவட்டம்.

3.உதவி இயக்குநர்,
(நகராட்சி ஒய்வூதிய சரிசார்ப்பு)
உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
குறளகம், சென்னை–108.